மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: டாக்டர் .கே.சு.பழனிசாமி இ.ஆ.ப.,

செ.மு.ந.எண்.27396/எம்5/2023 நாள்.12.10.2023

பொருள் பணியமைப்பு– தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் – நேரடி நியமனம் – தொகுதி–IV பணிகளுக்கான போட்டி தேர்வு – தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வாளருக்கு தற்காலிக பணி நியமனம் செய்து ஆணை வழங்குதல்– தொடர்பாக.

பார்வை 1.சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்.1944/PSD–D2/2023, நாள். 25.08.2023

2.மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். 27396/எம்5/2023, நாள். 11.09.2023.

-------

ஆணை:

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தில் தொகுதி–IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமன முறையில் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட **திரு.க.கௌதம்** தற்காலிக அடிப்படையில் **சென்னை–35, தலைமை அலுவலகத்தில் (எம் பிரிவு) இளநிலை உதவியாளராக** ரூ.19,500–71,900/– (நிலை–8) என்ற ஊதிய நிலையில் கீழ்காணும் நிபந்தனைகளின் பேரில் நியமனம் செய்யப்படுகிறார்.

1. இவரது நியமனம் மற்றும் பணிவரன்முறை, சென்னை உயர்நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் இப்பதவி குறித்து நிலுவையிலுள்ள வழக்குகளின் இறுதி முடிவுக்கு உட்பட்டு தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறது.

2. இவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறானவை என தெரிய வந்தாலோ அல்லது மூலச்சான்றிதழ்களை சரிபார்க்கும்போது தவறானவை என தெரியவந்தாலோ இவரது தற்காலிக நியமனம் எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக இரத்து செய்யப்படும்.

3. இவரது மூலச்சான்றிதழ்கள் இவர் பணியில் சேரும் அலுவலகத்தில் சரிபார்ப்பதற்காக சமர்ப்பிக்க வேண்டும். மூலச்சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரிபார்த்த பின்னர் விவரங்கள் சரியில்லையென தெரிய வந்தால் இவருடைய தற்காலிக நியமனம் இரத்து செய்யப்படும்

4. தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் விதி 20 (5)-ன் படி பணியாளர் உடற்தகுதி உடையவராக இருக்கின்றாரா என உடற்தகுதி சான்றிதழ் கொண்டு சரிபார்த்து திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் இவர் பணியில் சேர அனுமதிக்கப்படுவார்.

5. தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி 7(5)-ன் படி குறித்த காலக்கெடுவிற்குள் பணியில் சேர தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இத்துறையில் தற்காலிக நியமனம் செய்யப்பட்ட பணியாளர் இக்குறிப்பாணை கிடைத்த <u>15 தினங்களுக்குள்</u> பணியில் சேர வேண்டும் எனவும், பணியில் சேர கால நீட்டிப்பு கோரி விண்ணப்பிக்க கூடாது எனவும், மேற்குறிப்பிட்ட தேதிக்குள் பணியில் சேரவில்லை எனில் இவரது பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்துறையில் நியமனம் செய்யப்பட்ட பணியாளரின் நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்றும் அவர் விண்ணப்பத்தில் தெரிவித்த விவரங்கள் அல்லது அவர் உடற்தகுதி சான்றிதழ்களின்படி அவர் அரசுப் பணிக்கு தகுதியற்றவர் என பின்னர் தெரிய வந்தாலோ அவரது தற்காலிக நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக இரத்து செய்யப்படும். பணிமாறுதல் குறித்து எந்தவித கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், அதன் தொடர்ச்சியாக எந்தவித பரிந்துரையும் மேற்கொள்ளக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. தேர்வு செய்யப்பட்ட பணியாளர் தனது பெயரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த அட்டையின் அசலினை அவ்வலுவலகத்திற்கு திரும்ப அளித்திடும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் ஒப்படைத்திட தெரிவிக்கப்படுகிறது.

இவர் இச்செயல்முறை ஆணையினை பெற்று கொண்டமைக்கு உடன் ஒப்புகை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணையர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

**பெறுநர்**
Thiru. K.Gautham,
6E, Parvath Apartment,
Duraikannu Salai,
Zamin Pallavaram,
Chengalpattu District,
Tamil Nadu.
Pincode 600 117

12/10/2023

**நகல்.**
அ/எஸ்/எம் பிரிவு கண்காணிப்பாளர், தலைமையலுவலகம்.
அ5/ எஸ்2 இருக்கை உதவியாளர், தலைமையலுவலகம்.
எம்5 இருப்பு கோப்பு.